செ.வெ.எண்-20 நாள்-11.08.2021

# அரியலூர் மாவட்டம்

# மாற்றுத்திறனுடைய குழந்தைகளுடைய பயிற்சி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டார வள மையத்தில் உள்ள மாற்றுத்திறனுடைய குழந்தைகளுடைய பயிற்சி மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (11.08.2021) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கும், பெற்றோர்களுக்கும் தொலைபேசி வாயிலாக அளிக்கப்பட்டு வரும் பயிற்சிகள் குறித்தும், கொரோனா பாதுகாப்பு வழிமுறைகள் குறித்தும் அலுவலர்கள் மற்றும் பெற்றோர்களிடம் கேட்டறிந்தார்கள். மேலும், மாற்றுத்திறனாளி குழந்தைகளின் பெற்றோர்களுக்கு தங்கள் குழந்தைகளுக்கு சத்தான உணவு வழங்கவும், தங்களது சுற்றுபுறத்தை தூய்மையாக வைத்து கொள்ளவும், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு தொடர்ந்து பயிற்சி அளிக்கவும், மேலும், கொரோனா பெருந்தொற்று காலத்தில் முககவசம் அணிந்து, சமூக இடைவெளியினை கடைபிடித்து, அடிக்கடி சோப்பு போட்டு கைகளை கழுவவும், சிறப்பு தேவையுள்ள மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு அதிக கவனம் செலுத்தவும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

பின்னர், அரியலூர் மாவட்ட ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மூலம் 1 மூன்று சக்கர வண்டி, 3 சக்கர நாற்காலி, 1 சிறப்பு சக்கர நாற்காலி, 2 நடைபயிற்சி சாதனங்கள், 14 கற்றல், கற்பித்தல் உபகரணங்கள், 1 முடநீக்கியல் சாதனம், 2 காதொலிக்கருவி, பார்வையற்ற குழந்தைக்கு 1 ஊன்றுகோல், பார்வையற்ற குழந்தைக்கு 1 கைபேசியும் என மொத்தம் 22 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு ரூ.1,34,566/- மதிப்பீட்டில் அலிம்கோ உதவி உபகரணங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் வழங்கினார்கள்.

அதனைத்தொடர்ந்து, செந்துறை வட்டாரத்தில் செயல்பட்டு வரும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மற்றும் நியாயவிலைக்கடைகளை பார்வையிட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், நியாயவிலைக்கடைகளில் உள்ள உணவு பொருட்களின் தரம் குறித்தும் மற்றும் கூட்டுறவு வங்கிகளில் பராமரிக்கப்படும் பதிவேடுகளை குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்கள்.

இந்த ஆய்வின்போது, கோட்டாட்சியர் ஏழுமலை, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் க.மதிவாணன், வட்டாட்சியர்கள் ராஜமூர்த்தி (அரியலூர்), குமரையா (செந்துறை), மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் எம்.இராமன், மாவட்ட கல்வி அலுவலர் அம்பிகாபதி, உதவி திட்ட அலுவலர் பி.ராஜா, உதவி மாவட்ட திட்ட ஒருங்கிணைப்பாளர் கிருஷ்ணமூர்த்தி, கல்வி மாவட்ட ஆய்வாளர் பழனிசாமி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**